## 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

[2002 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.—ஒ 12/2002
4679

## உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டமானது, 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்.

**2.** 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 38ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் எதிர்பாரா இக்கட்டு நிலை காரணமாக தேர்தல்கள் தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று, தேர்தல்கள் பிரதேசம் எதிலும் வாக்கெடுப்பு நடாத்தப்படமுடியாமல் இருக்குமிடத்து," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேர்தல்கள் அலுவலர், ஆணையாளருடனான கலந்தாலோசனையுடன் ஏதேனும் அவசரகால நிலைமை அல்லது எதிர்பார சூழ்நிலைகள் காரணமாக, தேர்தல்கள் தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று தேர்தல் பிரதேசம் எதிலும் வாக்கெடுப்பு நடத்தமுடியாதென அபிப்பிராயப்படுமிடத்து," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

262 ஆம் அத்தியாயத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம், 80 ஆம் அத்துடன் 81 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம், 80 ஆம், 81 ஆம் பிரிவுகளை நீக்குதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 81இ, 81ஈ என்னும் பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 81இ, 81ஈ பிரிவுகளை நீக்குதல்.

சட்டத்தின்கீழான தேர்தலொன்றில் ஆதரவு கூட்டும் நோக்கத்துக்காக ஈடுபடுத்தப்படுதலோ அல்லது தொழிலுக்கமர்த்தப்படுதலோ ஆகாது:—

(அ) ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத் திற்கும், வாக்கெடுப்பின்போது அவ்வாக்கெடுப்பு நிலையத்துக்கான எவரேனும் வாக்கெடுப்பு முகவரின் நியமனத்தை இல்லாதொழிப்பதற் கான தேவையைக் கருத்திற் கொண்டு, நியாயமானதொரு எண் ணிக்கையினரான வாக்கெடுப்பு முக வர்கள் ;அத்துடன் ஒவ்வொரு வாக் கெண்ணும் நிலையத்திற்கும் 60 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள வாக்கெண்ணும் முகவர்களின் எண்ணிக்கைக்கு மேற்படாத வாக் கெண்ணும் முகவர்கள் ;

(ஆ) தேர்தல் இடப்பரப்பின் அளவையும், அத்தகைய இடப்பரப்பின் தேருநர் இடாப்பில் உள்ள தேருநர்களின் எண்ணிக்கையையும் கருத்திற் கொண்டு நியாயமானவொரு எண்ணிக்கையினரான எழுதுவினை ஞர்களும், தூதுவர்களும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தைப் பின்பற்றி அனுமதிக்கப்படக்கூடிய அத்தகைய விதிவிலக்குக்கு அமைவாக, எவரேனும் ஆள், ஒன்றில் தேர்தலொன்றுக்கு முன்னர், தேர்தலின்போது அல்லது தேர்தலொன்றுக்குப் பின்னர் இப்பிரிவை மீறி ஈடுபடுத்தப்பட்டால் அல்லது தொழிலுக் கமர்த்தப்பட்டால் அவரை ஈடுபடுத்தும் அல்லது தொழிலுக்கமாத்தும் ஆள் சட்டமுரணான பழக்கம் ஒன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

தேர்தல் வெளியீடுகளை அச்சிடுதல் ஆகியன.

82ஒ. இக்கட்டளைச் சட்டத்தின்கீழான தேர்தலொன்றைக் குறிப்பீடுசெய்வதும், அத்துடன், அதன் முகப்பக்கத்தில் அதனை அச்சிட்டவரதும்

குறித்தசில தவறுகளுக்கான மேலதிகத் தண்டம்.

82க. எழுபத்தேழு, 78, 81அ, 81ஆ, 82, 82அ, 82ஆ, 82இ, 82ஈ, 82எ, 81ஏ, 82ஐ அத்துடன் 82ஒ என்னும் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாள், அத்தகைய தவறுக்கென விதித்துரைக்கப்பட்ட வேறேதேனும் தண்டத்துக்கு மேலதிகமாக, அத்தகைய குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலப் பகுதியொன்றுக்கு, ஏதேனும் உள்ளூரதிகார சபைக்கு உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினரொருவராக அமர்வதற்கு அல்லது வாக்களிப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய பாகம் IVஅ என்பதனை உட்புகுத்துதல்.

**7.** பின்வரும் புதிய பாகமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 82க என்னும் பிரிவை உடனடுத்துப்பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் பாகம் IVஅ ஆகப் பயனுறுதலும் வேண்டும் :–

"பாகம் IV அ

**தேர்தல் மனுக்கள்**

வேட்பாளரின் குற்றத் தீர்ப்பினால் வறிதாக்கப் படுதல்.

82ங. (1) உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக வேட்பாளரொருவரின் தேர்தல், ஏதேனும் ஊழல் பழக்கத்திற்காக அல்லது சட்டமுரணான பழக்கத்திற்காக அவருக்கெதிராக குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதனால் வறிதானதாக்கப் படும்.

(2) உள்ளூர் அதிகாரசபையொன்றின் உறுப்பினரொருவராக ஆளொருவரின் தேர்தல் வெற்றானதென வெளிப்படுத்தப்பட்டுள்ளவிடத்து, அவர் அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக அமர்வதற்கு அல்லது வாக்களிப்பதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.

தேர்தல் மனுமீது தேர்தல் வறிதாக்கப் படுதல்.

82ச. (1) தேர்தல் மனு ஒன்றின்மீது தேர்தல் நீதிபதி திருப்திப்படும் வகையில் எண்பிக்கப்படக்கூடிய பின்வரும் ஏதுக்கள்மீது ஏதேனும் தேர்தல் இடப்பரப்பு தொடர்பான தேர்தல் வறிதானதென வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். அதாவது—

(அ) முன்னர் எண்வரிசைப்படுத்திக் கூறப்பட்டவற்றை ஒத்திருப்பினுஞ் சரி, அல்லாவிடினுஞ்சரி, பொதுவான இலஞ்சத்தின், பொதுவான உபசாரம் செய்தலின் அல்லது பொதுவான அச்சுறுத்தலின் அல்லது வேறு பிறழ்நடத்தை அல்லது வேறு சந்தர்ப்பங்கள் காரணமாக, தேருநர்களுள் ஒரு பிரிவினர் அவர்கள் விரும்பி அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக்குழுவிற்கு வாக்களிப்பதிலிருந்து தடுக்கப்பட்டனர் என்பதுடன் அதனால் தேர்தலின் முடிபு கணிசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பது ;

(ஆ) தேர்தல் தொடர்பான இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாமை, அத்தகைய ஏற்பாடுகளில் தரப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, தேர்தல் நடாத்தப்படவில்லையென்றும், அத்தகைய இணங்கியொழுகாமை தேர்தலின் முடிபைக் கணிசமாகப் பாதித்ததென்றும் தோன்றுமாயின் அந்த இணங்கியொழுகாமை.

(2) ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக வேட்பாளரொருவரின் தேர்தல், தேர்தல் மனுவொன்றின்மீது, தேர்தல் நீதிபதி திருப்திப்படும்வகையில் எண்பிக்கப்படக்கூடிய பின்வரும் எவையேனும் ஏதுக்களின் மீது வறிதானதென வெளிப்படுத்தப்படுதல் வேண்டும் ; அதாவது —

(அ) வேட்பாளரினால் அல்லது அவர் அறிந்திருக்கத்தக்கதாக அல்லது அவரின் சம்மதத்துடன் அல்லது

அந்த ஆளொருவரென அறிந்திருக்கத்தக்கதாக ஆதரவு தேடுபவராக அல்லது முகவராக அல்லது அவர் சார்பாகப் பேசுவதற்காக வேட்பாளர் தாமே ஈடுபடுத்தினார் என்பது ;

(ஈ) வேட்பாளரானவர், அவரது தேர்தலின்போது உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையற்றிருந்தார் என்பது.

தேர்தல் மனுக்களை 154ஒ என்னும் உறுப்புரையால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் விளங்குதல்.

82ஞ. தேர்தல் மனுவொன்று அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தின் (இதனகத்துப்பின்னர் "மேல் நீதிமன்றம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் தேர்தல் இடப்பரப்பிற்கான தேர்தலொன்று தொடர்பிலானதாக இருக்குமிடத்து, அத்தகைய நீதிமன்றம், இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட தேர்தல்கள் தொடர்பில் அத்தகைய தேர்தல் மனுவொன்றை விசாரிப்பதற்கு நியாயாதிக்கம் கொண்டிருத்தலும் நியாயாதிக்கத்தைப் பிரயோகித்தலும் வேண்டும். இப்பிரிவின்கீழ் அதன் தத்துவங்கள் தொடர்பில் மேல்நீதிமன்றத்தின் நியாயாதிக்கம், அத்தகைய மேல் நீதிமன்றத்தின் நீதிபதியால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இக்கட்டளைச் சட்டத்தில் "தேர்தல் நீதிபதி"யைப் பற்றிய குறிப்பீடு அதற்கிணங்க பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

எவர் மனுவைச் சமர்ப்பிக்கலாம் என்பது.

82ட. தேர்தல் மனுவொன்றானது, மேல்நீதிமன்றத்துக்கு பின்வரும் ஆட்களுள் ஒருவரால் அல்லது பலரால் சமர்ப்பிக்கப்படலாம். அதாவது—

(அ) அத்தகைய தேர்தலில் தெரிந்தனுப்பப்படுவதற்கு அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரிமையொன்றைக் கொண்டிருந்ததாகக் கோரும் ஆள் எவரும் ;

மேன்முறை யீட்டின் கேட்பு.

82வ. (1) மேன்முறையீடு செய்வதற்கான அனுமதி அளிக்கப்பட்டதன்மீது உயர்நீதிமன்றப் பதிவாளர் மனுவை முடிவுறாதுள்ள மேன்முறை யீடுகளின் இடாப்பில் பதியவேண்டும் என்பதுடன் மேன்முறையீட்டின் விடயம், பிரதம நீதியரசரால் அத்தகைய பதிவாளருக்குக் கொடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கிணங்க சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்கு மேலும் அறிவித்தலின்றி உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளின் குழாத்தின் முன்னிலையில் கேட்புக்கு வருதல் வேண்டும்.

(2) உயர்நீதிமன்றம் அதன் சொந்த விருப்பப் படி அல்லது அத்தகைய மேன்முறையீட்டிற்கான கட்சிக்காரரொருவரின் விண்ணப்பமொன்றின் மீதும், சம்பந்தப்பட்ட வேறு கட்சிக்காரர்களுக்கு நியாயமான அறிவித்தலுடனும், அது பொருத்த மானதெனக் கருதக்கூடியவாறு அத்தகைய மேன்முறையீட்டின் செலவு தொடர்பான அத்த கைய நியதிகளின்மீது அத்தகைய மேன்முறை யீட்டின் கேட்பைத் துரிதப்படுத்தலாம்.

(3) மேன்முறையீடு கேட்புக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது மேன்முறையீட்டாளர் மேன்முறையீட்டிற்கு ஆதரவாகவும் எதிர்வாதிகள் மேன்முறையீட்டிற்கு எதிராகவும் தம்பக்க வழக்கை எடுத்துரைத்தல் வேண்டும்.

மேன்முறை யீட்டில் உயர்நீதி மன்றத்தின் தத்துவம்.

82ள. (1) உயர்நீதிமன்றமானது, மேன்முறை யீட்டிற்கான கட்சிக்காரர்களின் தம்பக்க வழக்கைக் கேட்டதன்மீது மேன்முறையீடு தொடர்புடையதான தேர்தல் நீதிபதியின் தீர்மானத்தை அல்லது முடிபை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது எதிர்மாறாக்கலாம்.

(2) பிரிவு 82ம என்பதன் கீழான தேர்தல் நீதிபதியின் தீர்மானத்தை உயர்நீதிமன்றம் மேன்முறையீட்டில் எதிர்மாறாக்குமிடத்து, அவ்வுயர்நீதிமன்றமானது, தேர்தல் மனுவில்

82தா. விண்ணப்பம் செய்யப்படுவதன்மேல், விடயத்துக்கேற்றாற்போல தேர்தல் நீதிபதியொருவருக்கு அல்லது மேன்முறையீடொன்றின் விடயத்தில் உயர் நீதிமன்ற நீதிபதியொருவருக்கு, போதுமானதென தேர்தல் நீதிபதி அல்லது உயர்நீதிமன்ற நீதிபதி காணக்கூடியதான அத்தகைய சான்று மூலம் — மைசற்ற செயலுக்கும் சட்ட முரணின்மையும் விதி விலக்களிக்க நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.

(அ) ஒரு தேர்தலில் வேட்பாளர் ஒருவரின் அல்லது அவரது முகவர்களுள் எவரதும் அல்லது வேறு ஆளின் ஏதேனும் செயல் அல்லது செய்யாமையானது, இக்கட்டளைச் சட்டத்தை மீறுகின்ற கொடுப்பனவு, ஈடுபடுத்தல், தொழிலுக்கமர்த்தல் அல்லது ஒப்பந்தமாக இருக்கின்றமை காரணமாக அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுளெதனையும் வேறுவகையில் மீறுகின்றமை காரணமாக, இப்பிரிவுக்காக அல்லாவிடின், சட்ட முரணான பழக்கமொன்றாகும் என்றும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய ஏதேனும் செயல் அல்லது செய்யாமை, தற்செயலாக, அல்லது எதிர்பாராத கணிப்புகளால் அல்லது அதையொத்த தன்மையுடைய வேறு சில நியாயமான காரணத்தினால் நிகழ்ந்ததென்றும் அத்துடன் எப்படியிருப்பினும் நன்நோக்கின்மையால் நிகழ்ந்ததல்லவென்றும்,

காட்டப்பட்டு, அத்துடன், வேட்பாளர்களுக்கும், தெரிவத்தாட்சி அலுவலருக்கும், அத்தேர்தல் மாவட்டத்தினுள் இருக்கும் எவரேனும் தேருநருக்கும் தம்பக்க வழக்கை எடுத்துரைப்பதற்கான சந்தர்ப்பமொன்றையளித்த பின்னர்,

